**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 83/2020 P.W. 8/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு.ஜான் கிறிஸ்துராஜ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ.மரியஅலங்காரம் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 02.07.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் காவல் உதவி ஆய்வாளராக மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து 31.05.2022 ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்போது ஆசாரிப்பள்ளம் மேலத்தெருவில் வசித்து வருகிறேன். கடந்த 28.10.2019 ம் தேதி 13.00 மணிக்கு கொற்றிகோடு காவல் நிலைய தலைமை காவலர் தினகர்ராஜ் அவர்கள் ஆசாரிப்பளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனை பெற்று ஆசாரிப்பளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று அங்கு சிகிட்சையில் இருந்த மனிகண்டன், த/பெ.ராஜமணி என்பவரை விசாரித்து புகார் மனு பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப கொற்றிகோடு காவல் நிலைய குற்ற எண்.126/2019 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

2. கொற்றிகோடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.முத்துசாமி தலைமை காவலர் தினகர்ராஜ் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 28.10.2019 ம் தேதி 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயராபி மற்றும் அஜித் என்பவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம், பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். அந்த **மாதிரிவரைபடம், பார்வைமகஜர் முறையே அசா.5 மற்றும் அசா6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர்

சாட்சிகள் மணிகண்டன், கெசின், பிரதீஷ், தினகர்ராஜ், அஜித், ஜெயராபி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரி 11.11.2019 ம் தேதி நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார். பின்னர் இவ்வழக்கை 04.01.2020 ம் தேதி இவ்வழக்கை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 க்கு சிகிட்சை அளித்த மருத்துவர் அருன் ஜீ பிகின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். பின்னர் அசா.1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கப்பட்டதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) இருந்து மாற்றி இதச பிரிவுகள் 294(பி), 326, 506(2) ன் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கின் விசாரணை முடித்து 04.01.2020 ம் தேதி குற்றம்சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இதச பிரிவுகள் 294(பி), 326, 506(2) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. உதவி ஆய்வாளராக எவ்வளவு ஆண்டுகள் பணிபுரிந்தேன் என்றால் 10 ஆண்டுகள் பணிபுரிந்தேன். ஏற்கனவே காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் தயார் செய்து வைத்த ஆவணங்களின் அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மருததுவரை தவிர எந்த சாட்சியையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மற்ற சாட்சிகளை நான் விசாரரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால், ஏற்கனவே சொன்னது போல் சொன்னதால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அந்த விபரம் வழக்கு ஆவணங்களில் துலங்குமா என்றால், துலங்காது.

2. நான் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். சம்பவ எந்த இடத்தில் நடந்தது என்றால் கீழகரும்பாறை முத்தாரம்மன் ரோட்டிற்கு கீழ் பகுதியில் நடந்தது. குத்தகாயத்திற்கும் வெட்டுகாயத்திற்கும் உள்ள வித்தியாசம் எனன்கு தெரியுமா என்றால் தெரியும். நான் விசாரிக்கும் போது மருத்துவர் அசா.1 க்கு குத்துகாயம் என்று சொன்னாரா அல்லது வெட்டுகாயம் என்று சொன்னாரா என்றால், குத்துகாயம் என்று சொன்னார். காயம்பட்ட நபரை நான் விசாரித்தேனா என்றால், விசாரித்தேன். காயம்பட்ட நபர் தனியார்

மருத்துவமனையில் சிகிட்சை எடுத்துக்கொண்டதாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. மருத்துவரிடம் காயச்சான்றை நான் தான் பெற்றேன்.

3. அசா.3 காய்ச்சான்றிதழில் Initially treated in private clinic என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனறால் சரிதான். அது எந்த தனியார் மருத்துவமனை என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை. பொதுவாக இது மாதியான வழக்குகளில் முதலில் சிகிட்சை கொடுத்த மருத்துவரை விசாரணை செய்ய வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆனால் நான் இந்த வழக்கில் முதலில் சிகிட்சை கொடுத்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். அவரை சாட்சியாகவும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அசா.3 காயச்சான்றிதழில் அ,சா.1 ஐ அவரின் சகோதரி ஜெயா மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஜெயா காவல் துறையில் பணிபுரிகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஜெயாவை நான் சாட்சியாகவும் சேர்க்கவில்லை. விசாரிக்கவும் இல்லை என்றால் சரிதான்.

4. அவ்வாறு ஜெயாவை விசாரிக்காமல் இருந்ததற்கு ஏதாவது காரணம் உள்ளதா என்றால், காரணம் எதுவும் இல்லை. வழக்கு சம்பவத்தில் தொடர்புடைய கத்தி கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. அவ்வாறு கத்தியை கைப்பற்றப்படாதது குறித்து நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. விசாரித்த போது எதிரி தலைமறைவாக இருந்ததாக சொன்னார்கள். கத்தியை கைப்பற்றாததற்கு நான் சொல்லும் காரணம் வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். இந்த வழக்கில் இரத்தம் படிந்த ஆடைகளையோ இரத்தம்படிந்த மண்ணையோ கைப்பற்றவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபரை நான் விசாரித்த போது இடது கைவிரலில் அடிபட்டதாக சொன்னாரா என்றால், ஞாபகமில்லை.

5. காய்சான்றிதழில் சொல்லப்பட்டுள்ள ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே ஆவணங்களை நீதிமன்த்தில் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான். நான் இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், இந்த சம்பவத்திற்கும் குற்றம்சுமத்தப்பட்ட நபருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜெயா காவல் துறையில் பணிபுரிவதால் அவருடைய செல்வாக்கை பயன்படுத்தி குற்றம்சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக பொய்யாக புனையப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. காயம்பட்ட நபருக்கு

ஏற்பட்டகாயத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் யாரோ தயார் செய்துவைத்திருந்த ஆவணங்களின் அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பது சட்டத்திற்கு உகந்ததல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram